South East London
Integrated Care System

NHS
South East London

# தெற்கு லண்டனில் தட்டம்மை நோய் அதிகரித்து வருகிறது

## உங்கள் குழந்தையை இப்பொழுதும் எதிர்காலத்திலும் தட்டம்மை நோயில் இருந்து பாதுகாத்திடுங்கள்



ஸ்கேன் செய்யவும்

மேலும் விவரங்களை இங்கே அறியுங்கள்

**www.nhs.uk/measles**

# தட்டம்மை நோய் எளிதாகப் பரவும். MMR (தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி மற்றும் ஜெர்மானிய தட்டம்மை) தடுப்பூசியானது சிறந்த பாதுகாப்பைத் தருகிறது.

## தட்டம்மையின் அறிகுறிகள்

பொதுவாக சளி போன்ற அறிகுறிகளுடன் தட்டம்மை ஆரம்பித்து பிறகு வேனற்கட்டிகள் தோன்றும். சிலருக்கு வாயிலும் சிறு புள்ளிகள் தோன்றலாம். சில நேரங்களில் கண்பார்வையிழப்பு, நிமோனியா காய்ச்சல், மூளைக்காய்ச்சல் மற்றும் ரத்த சீழ்த்தொற்று போன்ற தீவிரமான சிக்கல்களையும் ஏற்படுத்தி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்.



தட்டம்மை கட்டிகள் பார்ப்பதற்கு எவ்வாறு இருக்கும்

அறிகுறிகள் பற்றி இன்னும் விவரங்கள் மற்றும் உங்களுக்கு அல்லது உங்கள் குழந்தைக்கு தட்டம்மை நோய் இருக்கிறது என்று தோன்றினால் என்ன செய்வது என்பதையும் இங்கே அறிந்துகொள்ளுங்கள்: **www.nhs.uk/measles**

## என் குழந்தைக்கு எதற்காக தடுப்பூசி வழங்கவேண்டும்?

NHS வழமையான குழந்தைப்பருவ தடுப்பூசி திட்டத்தில் MMR தடுப்பூசியும் ஒரு பகுதியாகும் - முதல் டோஸ் ஒரு வருடத்திலும் இரண்டாம் டோஸ் 18 மாதத்திலும் வழங்கப்படுகிறது.

முழுப் பாதுகாப்பிற்கு 2 டோஸ் MMR தடுப்பூசி தேவைப்படுகிறது. தவறவிட்ட டோஸ்களை எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

## MMR தடுப்பூசி பாதுகாப்பானதா?

MMR தடுப்பூசி பாதுகாப்பானது மேலும் 1980 இன் ஆரம்பகாலத்தில் இருந்தே பயன்படுத்தப்படுகிறது.

MMR தடுப்பூசிக்கும் ஆட்டிசத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. பல ஆய்வுகள் இதைக் காட்டுகின்றன.

## MMR தடுப்பூசிக்கு பக்க விளைவுகள் ஏதேனும் உள்ளனவா?

அனைத்து மருந்துகளையும் போல, MMR தடுப்பூசி சில பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். பெரும்பாலான பக்க விளைவுகள் வீரியம் குறைவானவை, அதாவது தடுப்பூசி எடுத்துக்கொண்ட கையில் வலி அல்லது சில நாட்களுக்கு உயர் உடல்வெப்பநிலையுடன் உங்கள் குழந்தை நோய்வாய்ப்படுதல் போன்றவை.

தடுப்பூசி எடுத்துக்கொள்ளாமல் இருத்தலை விட தடுப்பூசி எடுத்துக்கொள்ளுதல் பாதுகாப்பானது என்று ஆதாரங்கள் கூறுகின்றன.

## MMR தடுப்பூசியை ஜெலாட்டின் (பன்றிகளில் இருந்து) அதாவது ஊன்பசை இருக்கிறதா?

இங்கிலாந்தில், நன்றாக வேலை செய்யும் இரண்டு MMR தடுப்பூசிகள் உள்ளன. ஒன்றில் பன்றிகளில் இருந்து எடுக்கப்படும் ஜெலாட்டின் உள்ளது, மற்றொன்றில் இல்லை. ஜெலாட்டின் இல்லாத தடுப்பூசியை நீங்கள் விரும்பினால், நேரநியமனம் செய்யும் பொழுது உங்கள் GP -யிடம் கூறுங்கள்.

## எனக்கோ அல்லது எனது குழந்தைக்கோ எங்கே தடுப்பூசியைப் பெறலாம்?

நேரநியமனம் செய்வதற்கு உங்கள் GP பயிற்சியைத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் இங்கே கிளினிக்குகளையும் வைத்துள்ளோம்:

